Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No.253/2024

2025-ம் ஆண்டு ஜுன் மாதம் 27-ம் தேதி வெள்ளிகக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 1 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 1 | தொழில் | - | டைலர் வேலை |
| பெயர். | - | அமுதா | வட்டம் | - | திருவண்ணாமலை |
| க/பெ. | | அப்புனு | சமயம் | - | |
| கிராமம் | - | திருவண்ணாமலை | வயது | - | 36 |

27.06.2025

1 வது எதிரி ஆஜர். 2 வது எதிரி ஆஜரில்லை. 2 வது எதிரி தரப்பில் கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

1. அ.சா.2 எனது அம்மா. நானும், எனது அம்மாவும் காடங்கனூரில் வசித்து வருகிறோம். சம்பவம் சம்மந்தமாக போலீசில் புகார் வாக்குமூலமாக கொடுத்தேன் என்றால் ஆமாம். என்னை ஏதோ அடித்துவிட்டதாகவும், காயம் பட்டதாகவும் சொல்கிறேனே, அது சம்மந்தமாக மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் சென்றேன்.

2. புகார் வாக்குமூலத்தை 07.05.2021 ல் கொடுத்தேன். நீதிமன்ற முதல் விசாரணையில் ஆஜர் எதிரி ஏழுமலை என்னிடம் உனக்கு குழந்தை இல்லை, என்னுடன் இருந்தால் குழந்தை பிறக்கும் என்று சொல்லியுள்ளேனே இந்த விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

3. முதல் விசாரணையில் 05.07.2021 ல் காலை 08.00 மணிக்கு நான் ஸ்கூட்டியில் சென்று கொண்டிருந்த போது எதிரி பரமசிவம் வந்து என் வண்டியை மறித்து நிப்பாட்டி என்னை தப்பான பொண்ணு என்று சொல்லி தாக்கியதாக சொல்லியுள்ளேனே இந்த விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

4. எனது அப்பா பெயர் முருகன். எனது அப்பா 1வது எதிரி ஏழுமலையிடம் 1,20,000/- கடன் வாங்கினார் என்றால் சரிதான், என் மூலமாக எனது அப்பாவிற்கு பணம் கொடுத்தால் திரும்பி வராது என்ற நிலையில் எனது மாமாவான 1வது எதிரி ஏழுமலையிடம் எனது தாலியை அடமானம் வைத்து பணத்தை கொடுத்துஎனது அப்பாவிடம் கொடுக்க சொன்னேன்.

5. 1வது எதிரி கொடுத்த பணத்தை திருப்பி கேட்டதால் என்னை வைத்து பொய் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 2 வது எதிரி பரமசிவத்திற்கும் எனக்கும் 3 செண்ட் வீட்டு மனை சம்மந்தமான பிரச்சனை இருந்தது என்றாலும் அதனால் அவர் மீதும் பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் அப்படியெல்லாம் இல்லை. எதிரிகள் எந்த வித குற்றம் செய்யவில்லை என்றாலும், அவர்கள் மீது பொய்யாக புகார் கொடுத்துளேன் என்றால் அப்படியெல்லாம் இல்லை, நடந்ததெல்லாம் உண்மை.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No.253/2024

2025-ம் ஆண்டு ஜுன் மாதம் 27-ம் தேதி வெள்ளிகக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 2 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 2 | தொழில் | - | விவசாயம் |
| பெயர். | - | கற்பகம் | வட்டம் | - | கண்டாச்சிபுரம் |
| க/பெ. | | முருகன் | சமயம் | - | |
| கிராமம் | - | காடங்கனூர் | வயது | - | 55 |

27.06.2025

1 வது எதிரி ஆஜர். 2 வது எதிரி ஆஜரில்லை. 2 வது எதிரி தரப்பில் கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

1. எனது கணவர் பெயர் முருகன். அ.சா.1 எனது மகள். நீதிமன்ற முதல் விசாரணையில் எனது மகள் எனக்கு போன் செய்து எதிரிகள் தப்பாக நடந்துகொள்ள முயல்வதாக சொன்னதாக சொல்லியுள்ளேனே இது போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

2. 05.07.2021 ல் அ.சா1 இருசக்கர வாகனத்தில் சென்ற போது எதிரிகள் தாக்கிய விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனது கணவர் 1வது எதிரி ஏழுமலையிடம் 1,20,000/- கடன் வாங்கினார் என்றால் நாங்கள் கடன் வாங்கினோம், கடன் கொடுத்தோம், அவர் பாண்டு தான் கொடுக்கவில்லை. அந்த கடனுக்கும், புகாருக்கும் சம்மந்தம் இல்லை.

3.. 2 வது எதிரி பரமசிவத்திற்கும் எனக்கும் 3 செண்ட் வீட்டு மனை சம்மந்தமான பிரச்சனை இருந்தது என்றாலும் அதனால் அவர் மீதும் பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் அந்த வீட்டு மனைக்கும், இதுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை. எதிரிகள் எந்த வித குற்றம் செய்யவில்லை என்றாலும், அவர்கள் மீது பொய்யாக புகார் கொடுத்து பொய்யாக சாட்சியம்

சொல்கி றேன் என்றால் அப்படியெல்லாம் இல்லை. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No.253/2024

2025-ம் ஆண்டு ஜூன் மாதம் 27-ம் தேதி வெள்ளிகக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 3 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 3 | தொழில் | - | ஆட்டோ ஓட்டுநர் |
| பெயர். | - | குமார் | வட்டம் | - | கண்டாச்சிபுரம் |
| க/பெ. | | சிதம்பரம் | சமயம் | - | |
| கிராமம் | - | மணம்பூண்டி | வயது | - | 55 |

27.06.2025

1 வது எதிரி ஆஜர். 2 வது எதிரி ஆஜரில்லை. 2 வது எதிரி தரப்பில் கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

1. நான் ஆட்டோ ஓட்டுநராக வேலை செய்கிறேன். அ.சா.1, 2 ஐ தெரியும். இந்த வழக்கு விவரம் அனைத்தும் அ.சா.1, 2 சொல்லி தெரியுமா என்றால் நான் ஆட்டோ ஓட்டுநராக வேலை செய்கிறேன், ஆட்டோ ஓட்டி செல்லும் போது சம்பவம் நடந்ததை பார்த்தேன், போலீசாரிடம் சொன்னேன்.

2. இந்த வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் விசாரிக்கும் போது சொன்னேனா என்றால் சொன்னேன். இந்த வழக்கு பற்றி எனக்கு தெரியாது என்றாலும்,அ.சா.1, 2 எனக்கு தெரிந்தவர் என்பதால் அவருக்கு அனுசரணையாக பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் அப்படியெல்லாம் இல்லை, ஆட்டோ ஓட்டி செல்லும் போது நடந்ததை சொன்னேன்.

(Sd/-R.Senthilkumar)

D.M-cum-JM,

T.V.Nallur.